விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 074 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 19 வெள்ளிக்கிழமை (03.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கடற்றொழில் செயற்பாட்டை கட்டுப்படுத்த

## தொண்டர் அணி உருவாக்கம்



### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் தொண்டர் அணி ஒன்றினை உருவாக்க உள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

15

## நீதிமன்ற கட்டளைக்கு மாறாக குருந்தூர்மலையில் பௌத்த கட்டுமானம்

### தொல்பொருள் திணைக்களம், பொலிஸார் அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிமன்ற கட்டளைகளுக்கு மாறாக குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த ஆலய கட்டுமானம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு

15



## யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி

### இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழில் வடக்கின் நுழைவாயில் எனும் தொனிப் பொருளில் 13ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை என மூன்று

15

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் எப்போது?

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்க்கமான சந்திப்பு இன்று

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை தீர்மானிப்பது உள்ளிட்ட தேர்தலுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கூடவுள்ளது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு முன்னதாக அறிவித்திருந்தது.

எனினும், நிதிப்பிரச்சினை உள்ளிட்ட காரணங்களால் தேர்தல் பிற்போடப்பட்டது.

இந்நிலையில் புதிய திகதியை தீர்மானிப்பது உள்ளிட்ட காரணங்கள் பற்றி ஆராயவே தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கூடவுள்ளது. (ம-7)

## கச்சதீவு திருவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா இன்று ஆரம்பித்து நாளை 4ஆம் திகதி வரை 2 நாட்கள் இடம்பெறவுள்ளது.

திருவிழாவை முன்னிட்டு இன்று மாலை 4.30 மணிக்கு அந்தோனியாரின் உருவம் பதித்த கொடி ஆலயம் முன்பாக

15

சாவகச்சேரியில்

## பெண் ஒருவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி கிழக்குப் பகுதியில் பெண்ணொருவர் நேற்று வியாழக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

65 வயதான தவமணி என்ற வயோதிபப்பெண்ணே இவ்வாறு சடலமாக

15

## வவுனியாவில் மருமகன் தாக்கியதில் மாமியார் சம்பவ இடத்திலேயே பலி

### மனைவி கவலைக்கிடம்

(வவுனியா)

வவுனியா பெரிய உலுக்குளம் பகுதியில் மருமகனின் தாக்குதலுக்குள்ளாகிய மாமியார் சம்பவ இடத்திலேயே பலியாகியதுடன், மனைவி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்றுக் காலை கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்

15

யாழ்.சுழிபுரத்தில்

## இந்திய இழுவை படகுகள் மீண்டும் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுழிபுரம் மேற்கு சவுக்கடி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு கடற்றொழிலுக்கு சென்ற மூன்று மீனவர்களின் வலைகள் நாசமாக்கப்பட்டுள்ளது.

15

யாழ்.மாவட்டச் செயலகத்தில்

## இலங்கை - இந்திய மீனவர்களின் நல்லெண்ண சந்திப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையிலான நல்லெண்ண சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

கடற்றொழில் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறும்.

இந்திய - இலங்கை கடற்றொழிலாளர்களிற்கிடையில் ஏற்பட்டுள்ள மோதல் போக்கு தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தச் சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை, இந்த சந்திப்புக்கு வடக்கிலுள்ள பெரும்பாலான பாரம்

15

## உரும்பிராயில் கஞ்சா நுகர்ந்த மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் பொது இடத்தில் கஞ்சா நுகர்ந்த மூவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் திருநெல்வேலி மற்றும் யோகபுரம் பகுதியை சேர்ந்த 30 வயதுக்கு குறைந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து குறிப்பிட்ட அளவு கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளனர். (ம-7,33,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச வங்கிகள் தடையெனில்

# தனியார் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்க தீர்மானம் - பந்துல

(கொழும்பு)

மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன் உறுதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு அரச வங்கிகளின் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தடையாக இருக்குமானால், தனியார் வங்கிகளில் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சருமானபந்துல குணவர்தன தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த முதலாம் திகதியன்று கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் குறிப்பிட்டார்.


நிதி அமைச்சின் அனுமதியுடன், மேற்குறித்த வங்கிக் கணக்குகள் தனியார் வங்கிகளில் ஆரம்பிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக அரச வங்கிகள் ஊடான வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் செயற்படுத்தப்பட முடியாமல் போனால், கடன் உறுதிப் பத்திரம் உள்ளிட்ட அடிப்படை நடவடிக்கைகள் அனைத்தும் மந்த கதியில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படும் என விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் ஆழமாக கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக அரச வங்கிகளின் நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெற்று மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன் உறுதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போனால், நிதி அமைச்சின் அனுமதியுடன் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுறவுகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்டவை தனியார் நிறுவனங்களில் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# இந்திய மீனவர்களை பாதுகாக்க நடவடிக்கை

## ஜெய்சங்கர் தெரிவிப்பு



வெளியுறவுத்துறை அமைச்சர், கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தமது பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(கொழும்பு)

இந்திய மீனவர்களைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர், கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் குப்புசாமி அண்ணாமலைக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களைத் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி பா.ஜ.க தலைவர் குப்புசாமி அண்ணாமலை அண்மையில் இந்திய வெளியுறவுத்துற அமைச்சருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

நாகை மாவட்டம் கோடியக்கரை அருகே மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை நடத்தியதாக கூறப்படும் தாக்குதலில் நால்வர் காயமடைந்ததாக அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த விவகாரம் தொடர்பில், உயர்ஸ்தானிகராலயத்தினூடாக இலங்கை அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சரின் பதில் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தாக்குதல் தொடர்பான விபரங்களை இலங்கை அரசாங்கத்திடம், இந்திய உயர்ஸ்தானிகராலயம் கோரியுள்ளதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தமது பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் எவ்வித தாக்குதலையும் மேற்கொள்ள வில்லை எனவும் அது முற்றுமுழுதான பொய் குற்றச்சாட்டு எனவும் கடற்படை ஊடகப்பேச்சாளர் கெப்டன் கயான் விக்ரம சூரிய தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 30.06.1932

விண்ணில் 02.03.2023

எமது பாடசாலை அதிபர்
திருமதி **வாசுகி தவபாலன்** அவர்களின்
அன்புத் தந்தை
அமரர்
**சுப்பிரமணியம் இரத்தினம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(14777)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி**



# மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 11 . 1937



இறப்பு 01 . 03 . 2023

## திரு. இளையதம்பி கிருஸ்ணபிள்ளை

(முன்னாள் நில அளவையாளர், CEB)

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கரணவாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இளையதம்பி கிருஸ்ணபிள்ளை அவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை (01.03.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பார்வதி தம்பதிகளின் இளையமகனும், அப்பாப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும், விக்னேஷ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான நடேசு, பாக்கியம், திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரனும் மற்றும் சாந்தி, இரத்தினமாலா, சுபத்திரா, ஜெயமாலா ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலாயுதம்பிள்ளை, சிறிபாஸ்கரன், ஜெயகாந்தா, கணேசமூர்த்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2023) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளங்கரை,
கரணவாய் மத்தி, கரவெட்டி. (14783)

தகவல்: குடும்பத்தினர்
076 667 9895 / 021 226 3760



# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24 - 02 - 1959

விண்ணில் 05 - 03 - 2020

## அமரர் செல்லையா சிவதாசன்

(சன்லைற் றைகிளீனர்ஸ் முகாமையாளர் - யாழ்ப்பாணம், கச்சேரி)

நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும்
பார்த்து ரசித்தவர் நீங்கள்!
நாம் வாழ் நாளில் எங்கு சென்றாலும்
யாரை சந்தித்தாலும் உங்கள் அன்பிற்கு ஈடாகாது
என்றுமே எம் வாழ்வில் கண்ட தெய்வம்
நீங்கள் மட்டுமே!

"கல்லில் கண்டில்லை சாமியை;
நம் கண்களினால், உள்ளத்தினால்
கண்ட சாமி"

புங்கன்குளம்,
அரியாலை.

(14779)

- குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கான உணவின் அளவை குறைக்கும் பல குடும்பங்கள்- ஆய்வில் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் உள்ள அரைவாசிக்கும் அதிகமான குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவளிக்கும் அளவைக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொண்ட ஆய்வில் வெளிவந்துள்ளது.**

நாட்டின் பொருளாதார மந்த நிலையால் ஏற்பட்ட பட்டினி நெருக்கடியால் இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதனைத் தடுப்பதற்கும் குழந்தைகளின் எதிர்காலத்தை காப்பாற்றுவதற்கும் அரசாங்கமும் சர்வதேச சமூகமும் தற்போதிருந்தே செயற்பட வேண்டுமென அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு வருடத்திற்கு முன் இலங்கை அரசாங்கம் தனது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதிலிருந்து, அதிகரித்து வரும் பணவீக்கம், உணவு, மருந்து, எரிபொருள் நெருக்கடி பற்றாக்குறை மற்றும் வேலையின்மை போன்ற பிரச்சினைகள் குடும்பங்களில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

உலக வங்கியின் கூற்றுப்படி, உலகில் மிகவும் உயர்ந்த உணவுப் பணவீக்கம் உடைய நாடுகள் பட்டியலில் இலங்கை 7 ஆவது இடத்தில் உள்ளது.

வீட்டு உபயோகப் பொருட்களை பணத்திற்கு விற்கும் நிலையில் 28 வீதமான குடும்பங்கள் காணப்படுவதாகவும் பெரும்பாலான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகமாக பாதிப்படைந்துள்ளதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அரைவாசிக் குடும்பங்கள் தங்கள் குழந்தைகளின் உணவு உட்கொள்ளும் அளவைக் குறைப்பதாகக் கூறினாலும், 27 வீதமானவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவைத் தவிர்ப்பதாகத் தெரிவித்தனர்.

வருமானம் பெறுவதற்கான நிரந்தர வேலைகள் இல்லாமையால் குழந்தைகளுக்கான அடுத்த வேளை உணவுகளை எங்கிருந்து பெற்றுக் கொள்வது என்று தெரியாத ஒரு ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்வதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (நி)

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி; இரட்டிப்பாகும் கொடுப்பனவுகள்

## அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

உயர்தர விடைத்தாள்களை மதிப்பிடும் ஆசிரியர்களுக்கான தினசரி கூட்டுக் கொடுப்பனவான 900 ரூபாவை 2,000 ரூபாவாக அதிகரிப்பதற்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஒட்டுமொத்த மதிப்பீட்டு கொடுப்பனவை இரட்டிப்பாக்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடும் விசேட அமைச்சரவை கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், விடைத்தாள்களை மதிப்பிடுவதற்காக ஆசிரியர்களிடம் இரண்டாவது முறையாக விண்ணப்பங்களை கோருவதற்கு பரீட்சை திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார் பல்கலைக்கழகங்களை ஒழுங்குபடுத்த தனி நிறுவனத்தை நிறுவவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களைப் பெற்றனர்.

15,000 பேர் விடைத்தாள் மதிப்பீட்டிற்கு விண்ணப்பித்துள்ளனர், ஆனால் இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் போன்ற பாடங்களுக்கு போதுமான ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவில்லை.

தினசரி மதிப்பீட்டு உதவித்தொகை உயர்த்தப்படாததால், ஏராளமான ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவில்லை.

கொடுப்பனவுகளை அதிகரிக்கும் புதிய தீர்மானத்தின் அடிப்படையில் ஆசிரியர்கள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிப்பார்கள் என பரீட்சை திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (நி)

# வரி ஏய்ப்பு செய்பவர்களை உடனடியாக அடையாளம் காணுமாறு உத்தரவு



(கொழும்பு)

வருமானத்தை மறைத்து வரி ஏய்ப்பு செய்பவர்களை உடனடியாக அடையாளம் காணுமாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வருமானத்தை வெளியிடாமல் தொடர்ச்சியாக வரி ஏய்ப்பு செய்யும் சில நபர்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அடையாளம் காண வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்பின் போது, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, வரி விதிப்பு மற்றும் வரி அறவீடுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

அரசாங்கத்தின் வருமானத்தில் கவனம் செலுத்தப்பட்ட நேரத்தில் வரி ஏய்ப்பாளர்களை அடையாளம் காண்பதும் மிகவும் முக்கியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இந்த பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணுமாறு அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (நி)

# நீண்டகாலம் சிறையிலுள்ள இலங்கையரின் விடுதலை குறித்து பரிசீலிக்க இந்திய உயர்நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

35 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ள இலங்கையர் ஒருவரை முன்கூட்டியே விடுதலை செய்வது குறித்து பரிசீலிக்குமாறு தமிழக அரசுக்கு இந்திய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மனுதாரரின் முன்கூட்டிய விடுதலையை மறுத்ததற்கு எதிரான மனுவிசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மனுதாரரின் மேல்முறையீட்டு மனு மீது மூன்று வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்கூட்டிய விடுதலைக்குப் பிறகு, தாம் சொந்த நாட்டிற்குத் திரும்புவதை உறுதி செய்வதற்காக, உள்துறை அமைச்சு மூலம் இந்திய அரசாங்கத்திடம் குறித்த இலங்கையர் கோரிக்கை விடுத்திருந்தார். (நி)

# இலங்கையில் உடல்பருமனால் பாதிக்கப்படுவோர் அதிகரிப்பு

## மருத்துவ நிபுணர் சாந்தி குணவர்தன

(கொழும்பு)

இலங்கை சனத்தொகையில் 15 சதவீத பெண்களும் 6.3 சதவீத ஆண்களும் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆண் மற்றும் பெண் மக்களிடையே உடல் பருமன் அதிகரித்துள்ளதாக மருத்துவ நிபுணர் சாந்தி குணவர்தன தெரிவித்துள்ளார்.

உடல் நிறை குறியீட்டெண் அடிப்படையில், உலக சுகாதார அமைப்பின் புள்ளி விபரங்களின்படி, ஆரோக்கியமான ஒருவரின் பிஎம்ஐ என்ற உடல் பருமன் கணக்கீடு 18.5 முதல் 24.9 வரை இருக்க வேண்டும்.

30 வயதிற்கும் மேற்பட்டவர்களின் பிஎம்ஐ 25 முதல் 29.9 இற்கு இடைப்பட்ட பிஎம்ஐ அதிக எடை கொண்டதாகவும் இருக்க வேண்டும் என மருத்துவ நிபுணர் சாந்தி குணவர்தன தெரிவித்துள்ளார். (நி)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்
திருமதி.ஜஸ்மின் கீர்த்திசீலன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி.ஜஸ்மின் கீர்த்திசீலன்



அமரர். **பிரகாசியம்மா மரியதாஸ்**

அவர்கள் இறைபதம் அடைந்து விட்டார்.
அன்னாரின் இழப்பினால் துயருற்றுள்ள
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(14780)

தோற்றம்-1947.05.09
மறைவு-2023.03.02

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் அணிக்கெதிரான முதல் ஒருநாள் போட்டி

## இங்கிலாந்து வெற்றி




பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது.

டாக்காவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 47.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சாந்தோ 58 ஓட்டங்களையும் மொஹமதுல்லா 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஜொப்ரா ஆர்செர், மார்க் வுட், மொயின் அலி மற்றும் அடில் ராஷித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கிறிஸ் வோக்ஸ் மற்றும் வில் ஜெக்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 210 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 48.4 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டாவிட் மாலன் ஆட்டமிழக்காது 114 ஓட்டங்களையும் அடில் ராஷித் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், தைஜுல் இஸ்லாம், 3 விக்கெட்டுகளையும் மெயிடி ஹசன் 2 விக்கெட்டுகளையும் சகிப் அல் ஹசன் மற்றும் டஸ்கின் அஹமட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 145 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 8 பவுண்ரிகள் அடங்கலாக, ஆட்டமிழக்காது 114 ஓட்டங்களை பெற்றுக் கொண்டாவிட் மாலன் தெரிவு செய்யப்பட்டார். (4)

# சர்வதேச போட்டிகளில் 500 விக்கெட்டுக்கள்

## ஜடேஜா சாதனை



இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான 3 ஆவது டெஸ்ட் போட்டியின் போது ஜடேஜா புதிய சாதனை நிகழ்த்தினார்.

சர்வதேச போட்டியில் 500 விக்கெட் வீழ்த்தி, 5 ஆயிரம் ஓட்டங்களை எடுத்து அவர் சாதனை படைத்தார்.

இத்தகைய சாதனை படைத்த 2 ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

முதல் வீரர் கபில்தேவ் ஆவார். ஜடேஜா 63 டெஸ்டில் 263 விக்கெட்டும் 171 ஒரு நாள் போட்டியில் 189 விக்கெட்டும் 64 இருபது ஓவர் ஆட்டத்தில் 51 விக்கெட்டும் ஆக மொத்தம் சர்வதேச போட்டியில் 503 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

டெஸ்டில் 2623 ஓட்டங்களும் ஒரு நாள் ஆட்டத்தில் 2447ஓட்டங்களும் 20 ஓவரில் 457 ஓட்டங்களும் ஆக மொத்தம் சர்வதேச போட்டியில் 5527 ஓட்டங்கள் எடுத்துள்ளார். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2775

### மலர்




### கமலன்




### சாரு




### நிதர்




### அலைக்ஸ்




### டிபி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் மா அதிபர் பதவிக்கு மும்முனை போட்டி

(கொழும்பு)

வெற்றிடமாகவுள்ள பொலிஸ் மா அதிபர் பதவிக்கு மும்முனை போட்டி ஆரம்பித்துள்ளதாக தெரியவருகி ன்றது.

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்ன கோன், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன ஆகியோருக்கிடையில் இந்த மும்முனைப் போட்டி நிலவுகிறது.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தனது சேவையை முடித்து இம்மாதம் 20ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


**பதவி வெற்றிடம்**

முகாமைத்துவ உதவியாளர் (பெண்கள்)

- க.பொ.த.உயர்தரத்தில் தோற்றியிருத்தல் வேண்டும்
- யாழ்.நகரில் இருந்து 5Km சுற்றுவட்டாரத்துக்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு-

**076 097 3121**



**பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனை**

**உங்கள்**

**கல்யாண மாலை**



உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்



நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1500/-
சேவைக் கட்டணம் ரூபாய் 500 /-

தொடர்பு - கல்யாணமாலை இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

T.P : 021 720 1005, 021 221 5434 Email : Kalyanamalai.jaffna@gmail.com


# இராசிபலன்

03.03.2023
மாசி 19, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முற்பகல் 11.26 மணிவரை

புனர்பூசம் பிற்பகல் - 5.41 மணிவரை
சுபநேரம் -6.27-7.57 மணிவரை
இராகுகாலம்- 10.57-12.27 மணிவரை

சந்திராஷ்டமம் -
கேட்டை, மூலம்
ஏகாதசி விரதம்

**வளவன்**

**மேஷம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்,உறவினர் வழியில் உள்ளம் மகிழும் வகையில் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** பயணத்தால் பலனுண்டு, தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**கன்னி** செல்வ நிலை உயரும் நாள்,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம்.

**துலாம்** விலகிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்,செய் தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.

**தனுசு** காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், நட்பு வட்டம் வரிவடையும், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** நம்பிக்கைகள் நடைபெறதும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், மறைமுகப் போட்டிகள் மாறும் , ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.


**மீனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள் ,பிறர் உதவியுண்டு.

பயத்தை உன்னிடமே வைத்துக் கொள், உன் துணிவைப் பகிர்ந்து கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரை பதிக்கப்படாமல் நிறுக்கும் கருவிகள் பயன்பாட்டில்

## 11 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை (தராசுகள்) பயன்படுத்திய 11 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் புதன்கிழமை பண்ணை மீன்சந்தை, நாவாந்துறை மீன்சந்தை, காக்கைதீவு மீன்சந்தை மற்றும் சின்னக்கடை மீன்சந்தை ஆகிய இடங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவ்வேளையில் வியாபாரிகளால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை பரிசோதித்த போது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 11 வியாபாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களைப் வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினர் தெரிவித்தனர். (4-6-33)

# சட்டவிரோதமான முறையில் மது விற்றவர் கைது

(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேலணை 3 ஆம் வட்டார பகுதியில், மதுபானத்துடன் அதே பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் குறித்த சந்தேகநபர் 24 கால் போத்தல்கள் சாராயம் மற்றும் 6 பியர் போத்தல்கள் ஆகியவற்றை புதருக்குள் வைத்து விற்பனை செய்தவேளை அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளார். (4-6-104)

# சிவராத்திரி தினத்தன்று வாள்வெட்டு சந்தேகநபர் கைது

(அராலி)

சிவராத்திரி தினத்தன்று நல்லூர் பின்வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய 27 வயதுடைய பிரதான சந்தேகநபர் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பதினெட்டாம் திகதி மகாசிவராத்திரி தினத்தன்று அதிகாலை வேளை நல்லூர் பின் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் தலைமறைவாகி இருந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான அணியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாளும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் ஏற்கனவே மூவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பிரதான சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். (4-6-104)

# அரசாங்கத்திற்கு எதிராக இன்று மாக்சிச லெனினிச கட்சி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அதிகரித்த மின்சாரக் கட்டண உயர்வைக் கைவிட வலியுறுத்தியும் உணவு - எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்க வலியுறுத்தியும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாண பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெறவுள்ள மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

ரணில் சர்வதிகார ஆட்சியே! மக்களை வதைக்காதே! மக்கள் போராட்டத்தில் அணிதிரள்வோம்!! என்ற தலைப்பில் கட்சியால் துண்டுப் பிரசுரமும் வெளியிடப்பட்டுள்ளது. (4-6)

# புலமைப்பரிசில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு

(சாவகச்சேரி)

யா/போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புலமைப்பரிசில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி. அபிராமி இராஜதுரையும் சிறப்பு விருந்தினர்களாக லண்டன் கிலிங்டன் தமிழ் கல்விக் கூடம் மற்றும் லண்டன் தமிழ் நிலையம் ஆகியவற்றின் ஆசிரியர் திருமதி.சந்திரவதனி மற்றும் ஓய்வுநிலை மக்கள் வங்கி உத்தியோகத்தர் க.ஞானசந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4-6-30)





காரைநகர் வலந்தலைமடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் சப்பரத வெள்ளோட்டம் நேற்று நடைபெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)

## பயணிகளை ஏற்றுவதில் போட்டி

# தனியார் பேருந்துகளின் நடத்துநர்கள் மோதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இரண்டு தனியார் பேருந்துகளின் நடத்துநர்கள் மோதலில் ஈடுபட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இரண்டு தனியார் பேருந்துகள் பயணிகளை ஏற்றும் போது ஏற்பட்ட போட்டி காரணமாக குறித்த முரண்பாடு இடம்பெற்று நடத்துநர் ஒருவர் தாக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் எவையும் பதிவு செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-6-30)

## முக்கிய பாகங்கள் இன்றி

# கைவிடப்பட்ட நிலையில் மோ.சைக்கிள் மீட்பு



(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்கு பகுதியில் வீடு ஒன்றிற்கு முன்னால் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சாளி மோட்டார் சைக்கிள் ஒன்று அதன் பாகங்கள் கழற்றி எடுக்கப்பட்ட நிலையில் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்திற்கு அருகில் உள்ள வீட்டின் உரிமையாளர் காலை வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தவேளை மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. (4-6-104)

# கஞ்சா பாவிக்க முயன்றவர் பொலிஸாரால் கைது

(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சின்னமடு பகுதியில், கஞ்சா பாவிப்பதற்கு முயன்றவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவர் இவ்வாறு ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நயினாதீவு பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து கஞ்சாவும் பறி முதல் செய்யப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் உயர்திரு.ஆறுமுகம் ரவீந்திரன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்

03.03.2023

## வாழ்த்துரை



திரு.ஆறுமுகம் ரவீந்திரன் பன்முக ஆளுமை கொண்ட கல்வியியலாளர். எமது கல்லூரியில் விசேட கல்வித் துறைக்குப் பொறுப்பாக இருந்து பல உயர்வான சேவைகளை ஆற்றியுள்ளார். விசேட கல்வித் துறை மாணவ ஆசிரியர்களை முறையாக வழிப்படுத்தி ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கி அவர்களை உன்னதமானவர்களாக உருவாக்கினார். இலங்கையிலேயே தமிழ்மொழி மூலம் விசேட கல்வித்துறை முதன்முதலில் எமது கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து பல செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தியதன் மூலம் விசேட கல்வித்துறை மாணவ ஆசிரியர்களின் வாண்மைத்துவத்திற்கு உரமூட்டியவர்.

அவருடைய உன்னதமான கல்வி மற்றும் சமூகப் பணியின் நீட்சியாக "வாழ்வகம்" என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவராக இருந்து தற்போது வரை சேவையாற்றி வருகின்றார். இறைவனுடைய குழந்தையாகவிருந்து அக்குழந்தைகளுக்காகவே சேவையாற்றும் அவரின் பணியையும் அவரின் எல்லா செயற்பாடுகளுக்கும் உறுதுணையாகவிருந்து செயற்படும் திருமதி ரவீந்திரன் மற்றும் பிள்ளைகளையும் வாழ்த்துவதில் பெருமையடைவதுடன் அவரின் சேவைகள் தொடர்ந்து. இன்று போல் அவர் என்றும் மகிழ்ச்சியாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி. திரு.சு.பரமானந்தம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

## முன்மாதிரிக்கு திரு.ஆ.ரவீந்திரன்



திரு.ஆ.ரவீந்திரன் அவர்கள் எனது மாணவன். இவரது திறமையை நான் நன்கறிவேன். பட்டப்பின் கல்வி டிப்ளோமா. கல்வி முதுமாணி மேற்பார்வையாளராக இருந்த போது அவரது கற்பித்தலை மற்றும் திறமையை நன்கறிந்து தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட கல்வித் துறைக்கு கல்வியியலாளராக தெரிவு செய்து இணைத்தேன். இதனால் வெற்றியும் கண்டேன். உலகில் எதுவும் நிலையில்லை. வாழும் காலத்தில் ஆற்றும் நற்செயல்களே நிலையானவை. அவை எம்மை தொடர்ந்து வாழ வைக்கும். நீர் ஆற்றும் தெய்வப் பணியை தொடருங்கள். மனநிறைவான் எனது வாழ்த்து என்றென்றும் உண்டு.

**முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்,**
**முதலாவது பீடாதிபதி.**

## வாழ்த்துரை



நான் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பீடாதிபதியாக இருந்த காலத்தில் திரு.ஆறுமுகம் ரவீந்திரன் கல்லூரியில் மிகச் சிறந்த கல்விச் சேவையை வழங்கினார். அவர் மிகவும் திறமைசாலி பன்முக ஆற்றல் கொண்டவர். எழுத்தாளர். கவிஞர். பாடகர். இசையமைப்பாளர். பேச்சாளர் என பல்வேறு திறமைகளைக் கல்லூரியில் வெளிக்காட்டினார். சமூகத்திற்கும் பல சேவைகளை ஆற்றி வருகின்றார். அவர் ஓய்வு பெறுவது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவர் அறுபதாவது ஆண்டு நிறைவில் மகிழ்ச்சியாக ஓய்வு பெற்று நல்வாழ்வு வாழ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கி ன்றேன். அவரது மணிவிழா சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றேன்.

**S.K.யோகநாதன்,**
**ஓய்வுநிலைப் பீடாதிபதி,**

## பதிவாளரின் இதயத்திலிருந்து வாழத்துச் செய்தி



திரு. ஆறுமுகம் ரவீந்திரன் SLTES-Grade II அகவை 60 பூர்த்தியாகி மணிவிழாக்காணும் நாயகனுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள் பலகோடி உரித்தாகட்டும்.

நிறைந்த வளம் மிகுந்த சந்தோசம். வெற்றி இவற்றையெல்லாம் இந்த இனிய அகவை உங்களுக்குக் கொண்டு வரட்டும். அதே போன்று உங்கள் வாழ்க்கையை கொண்டாடுங்கள். புதிய துவக்கத்தை கொண்டாடுங்கள். நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக்கும் நீங்கள் தொடர்ந்து உங்கள் வாழ்வகப் பணியை தொடருங்கள். காலம் என்ன... ஏன் உலகமே உங்கள் வாழ்வகத்தை நோக்கி வாழ்த்துக்களை குவிக்கும். உங்கள் சமூகப்பணி மேலும் தொடரட்டும். வாழ்த்துக்கள் கூற வந்திருக்கும்

**இரா.அருள்நேசன், பதிவாளர்,**
**யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.**



**பிறப்பு:- 03.03.1963**
**திருநெல்வேலி கிழக்கு**
**தாய் தந்தை:- ஆறுமுகம்-தங்கமணி**
**சகோதரர்:- திருமதி.தி.ஜெயராணி**
**திரு.ஆ.பரமேஸ்வரன்**
**கல்வி:- ஆரம்பக்கல்வி-கைதடி நவீல்ட் பாடசாலை**
**இடைநிலை:- யாழ்.இந்துக்கல்லூரி**
**உயர்கல்வி:-யாழ்.பல்கலைக்கழகம், கலைமாணி 1990 பட்டப்பின் கல்வி டிப்ளோமா-1995**
**முதுகல்விமாணி:- 2001**
**திருமணம்:- 1991 மோகனவதனி ரவீந்திரன்**
**தொழில் :- ஆசிரியர் யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம் :- 1993- 2004 வரை**
**விரிவுரையாளர்:- 2004 முதல் 2023 வரை**
**பிள்ளைகள்:-திருமதி.கீர்த்தனா கார்த்திகன்**
**திருமதி.பிரவீணா சுகிராஜ்**
**திரு.ரவீந்திரன் கீர்த்திகன்.**
**சமூகப்பணி:- வாழ்நாள் தலைவர்-2006 முதல் வாழ்வகம்**
**மேனாள் தலைவர்:-யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்**
**மேனாள் நிர்வாக உறுப்பினர்:-** AROD
**மேனாள் உறுப்பினர் நல்லூர் அரிமாக்கழகம்**
**அதிதி விரிவுரையாளர் :- இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**இலங்கைத் தேசிய கல்வி நிறுவகம்.**
**விசேட புலமைப்பரிசில் :- விசேட கல்வி தொடர்பான தென்கொரியா பயணம்.**

## வாழ்த்துச் செய்தி



பன்முக ஆளுமையுள்ளவராய் இருந்த திரு.ரவீந்திரன் அவர்கள் ஆசிரியராயிருந்து பல பட்டங்களைப் பெற்று தனது முயற்சியின் காரணமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தொழில் சார் கல்வி விரிவுரையாளர் நியமனத்தைப் பெற்றார். கல்லூரி ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை விசேட கல்வி கற்பிப்பதற்கான நிரந்தர விரிவுரையாளர் இல்லாத இடத்தை தானே முன்வந்து அவ்விடத்தை நிரப்பி செவ்வனே செய்து வந்த ஒரு பெரியவர் என்றால் மிகையாகாது. மாணவர்கள் மத்தியிலும் விரிவுரையாளர்கள் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்ற ஒருவராயிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரி மாணவர்களின் வளர்ச்சிக்கும் கல்விசார் செயற்பாடுகளுக்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து கல்லூரித் தாய்க்கு அளப்பரிய சேவையாற்றி மணிவிழாக்காணும் மாண்புறு பெருமகன் ஓய்வுக்காலத்தில் நீண்ட ஆரோக்கியத்துடனும் சீரும் சிறப்புடனும் தனது குடும்பத்தினருடன் இன்றுபோல் என்றும் நிறைவாக வாழ்வதோடு தொடர்ந்தும் கல்விப் பணியையும் சமூகப்பணியையும் வழங்க வித்தக விநாயகர் பாதம் பணிந்து எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**சதாசிவம் அமிர்தலிங்கம்,**
**முன்னாள் பீடாதிபதி.**

## முன்மாதிரிக்கு திரு.ஆ.ரவீந்திரன்



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் வள்ளுவர் வாக்குக்கு அமைவாக தனது வாழ்வினை சிறப்பாக அமைத்து வாழ்ந்து காட்டிய ஒரு பெருந்தகையே ஆசிரிய கல்வியியலாளர் திரு.ஆ.ரவீந்திரன் ஆவர்.

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றி பிரதிபலன் எதுவும் கருதாது சேவையாற்றியவர். கல்லூரியினால் என்றும் போற்றப்படக்கூடிய ஒரு ஆளுமை இவர் எனின் மிகையாகாது.

சிறந்த சொல்லாற்றல். நேர்மை தவறாதவர். குற்றம் கடிதலில் வெளிப்படைத்தன்மை. சிறந்த தொடர்பாடல் என்ற மிக உயர்ந்த பண்புகளை வெளிக்காட்டி "மனிதம்" நிறைந்த பண்பாளராக நான் அடையாளம் கண்ட ஒருவரே திரு.ஆ.ரவீந்திரன் சேர் ஆவார்.

பல நூற்றுக்கணக்கான மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையை செம்மையாக்கும் பணியில் இவர் ஒரு தெய்வத்திற்கு ஒப்பான பண்புகளோடு உயர்ந்து பரிண மிக்கின்றார். இவர் தனது ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக மகிழ்ச்சியாக தன்னு டைய சமூகப் பணிகளை தொடர வாழ்த்தி. பாராட்டி மகிழ்கின்றேன்.

**திரு.தி.ஜெயகாண்டீபன்,**
**உப பீடாதிபதி.**

## நாயகனே நின்பணி நயந்து துதிப்போம்!!!



திரு.ஆறுமுகம் ரவீந்திரன் 2004 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து ஏறத்தாழ 19 வருடங்கள் விசேட கல்வித் துறைசார்ந்த கற்கை நெறியை முனைப்புடன் முன்னெடுத்து ஆசிரியர் சேவையில் விசேட கல்வியில் வாண்மைத்துவம் மிக்க ஆசிரியர் பரம்பரையொன்றை உருவாக்குவதற்கு அயராது பணிசெய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் தங்களின் பணியின் பக்குவம் கண்டு நிறைவுறுகின்றேன். தங்களின் ஓய்வுக்காலம் நோய் நொடியின்றி சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகிறேன்.

**திரு.தங்கராசா தவனேசன்,**
**உப பீடாதிபதி ( கல்வியும் தர மேம்பாடும்)**

## சாதனை நாயகன்



ஏறத்தாழ 20 ஆண்டுகளாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு திரு.ஆ.ரவீந்திரன் அவர்கள் அளப்பெரிய சேவைகளை ஆற்றியுள்ளார்.

தனது விரிவுரைப் பணிகளுக்கு மேலதிகமாக பரீட்சைக் கடமைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளின் செயற்பாடுகளுக்கு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இக் கல்லூரியில் நீண்ட காலமாக விசேட கல்வி பாடநெறி மிகவும் வினைத்திறனாக நடைபெற ரவீந்திரன் சேரின் பங்களிப்பு அளப்பரியது. விசேட கல்விப் பாடத்துறையில் பெரும் ஆசிரியப் பரம்பரையை உருவாக்கியுள்ளார்.

ரவீந்திரன் சேரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**S.R.சத்தியேந்திரம் பிள்ளை.**
**உப பீடாதிபதி (தொடருறு கல்வி)**

## சேவை நாயகனுக்கு வாழ்த்துக்கள்



திரு.ஆறுமுகம் ரவீந்திரன் அவர்கள் எளிமையான தோற்றம். அன்பான அறிவு பூர்வமான வார்த்தைகள். மாணவ ரிடமும் ஏனையோரிடமும் காட்டும் கருணை. உடன் பணிபுரிவோரிடமும் சமூகத்தோடும் இருக்க வேண்டிய நட்புறவு என்பன அவரிடம் காணப்படும் நற்பண்புகள் ஆகும்.

ஆசிரியராக. விசேட கல்வித்துறை விரிவுரையாளராக வாழ்வக நிறுவனத் தலைவராக என பல துறைகளில் மிளிர்ந்த திரு.ஆறுமுகம் ரவீந்திரன் அவர்கள் காலத்தின் கட்டாயத்தால் சேவையை நிறைவு செய்தாலும் அவரின் ஓய்வுக் காலம் சீருடனும் சிறப்புடனும் அமையவும் அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விக்கும் சமூகத்திற்கும் பணி செய்யவும் எல்லாம்வல்ல வித்தக விநாயகரையும் முடி மன்னர் வைரவரையும் பிரார்த்திக்கிறேன்.

**அருணாசலம் குகன், உப பீடாதிபதி**
**(தொடருறு கல்வி-நிறுவன அபிவிருத்தி),**

**கல்லூரிச் சமூகம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# குழந்தைகள் ஹொலிவுட் படம் பார்த்தால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை

(பியாங்யாங்)

ஹொலிவுட் படங்களை பார்க்கும் குழந்தைகளுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அவர்களது பெற்றோர் 6 மாத காலம் தொழிலாளர் முகாம்களில் அடைக்கப்படுவார்கள் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.



வடகொரியா என்றாலே முதலில் ஞாபகத்துக்கு வருவது அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜங் உன் மற்றும் அங்கு நடைபெற்று வரும் சர்வதிகார ஆட்சியும் தான். வடகொரியா மற்ற நாடுகளில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகவே திகழ்ந்து வருகிறது.

அங்கு ஊடகங்கள் உட்பட அனைத்துமே அரசின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. அங்கு பல விநோதமான சட்டங்களும் அவ்வப்போது நிறைவேற்றப்படுவது வழக்கம்.

அந்த வகையில் தான் தற்போது ஒரு விநோதமான சட்டத்தை கிம் ஜங் உன் தலைமையிலான அரசு நிறைவேற்றி இருக்கிறது. அதன்படி வடகொரியாவில் உள்ள குழந்தைகள் ஹொலிவுட் அல்லது தென்கொரிய படங்களை பார்ப்பதற்கு தடை விதித்துள்ளது.

அதையும் மீறி பார்க்கும் குழந்தைகள் 5 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்கின்ற கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதுமட்டுமின்றி அந்த குழந்தைகளின் பெற்றோரும் 6 மாத காலம் வரை தொழிலாளர் முகாம்களில் அடைக்கப்படுவார்கள் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

இதற்கு முன்னர் வரை இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் கடுமையான எச்சரிக்கைக்கு பின்னர் விடுவிக்கப்பட்டு வந்தனர்.

ஆனால் தற்போது அதற்கு கருணை காட்டப்பட மாட்டாது என திட்டவட்டமாக கூறி இந்த உத்தரவை பிறப்பித்து உள்ளது.

இதனைக் கண்காணிக்க தனிக் குழுக்களை அமைத்து இருக்கிறதாம் வடகொரிய அரசு. மேற்கத்தேய ஊடகங்களின் ஊடுருவலை தடுக்கவே இத்தகைய நடவடிக்கையை கிம் ஜங் உன் அரசு மேற்கொண்டு உள்ளதாகக் கூறப்படுகிறது.

வடகொரியாவில் திரைப் படங்களுக்கு மட்டுமல்ல நடனமாடுவது, பாடல் பாடுவது உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தாய்வானிற்கு ப...

# தக்க பதில...

(தாய்பே)

**தாய்வான் பகுதிக்குள் அச்சுறுத்தும்... போர்க் கப்பல்கள் நுழைந்ததாக அ... சாட்டியுள்ளது.**

உலக அரங்கில் தாய்வான் அதிகாரபூர்வமான தனி நாடாக செயற்பட்டு வரும் நிலையில், சீனா தாய்வானை தங்கள் நாட்டின் ஒற்றை அங்கமாக அறிவித்து வருகிறது.


மேலும், அமெரிக்காவுடன் தாய்வான் நெருக்கம் காட்டி வருவதை சீனா வெளிப்படையாக எதிர்த்து வருவதுடன், தாய்வானை அச்சுறுத்தும் விதமாக இராணுவ அத்துமீறல்களையும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

# இரண்டு ரயில்கள் நேருக்... 32 பேர் உயிரிழப்பு-அதி...

## கீரீஸின் வடக்கு ...

(கிரீஸ்)

கிரீஸின் வடக்குப் பகுதியில் இரண்டு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 32 பேர் உயிரிழந்துள்ளதுடன், அதிகளவானவர்கள் காயமடைந்துள்ளனர்.



நேற்று முன்தினம் எதென்ஸிலிருந்து தெசலோனிகிக்கு சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில், தெசலோனிகியில் இருந்து லாரிசா நகர் நோக்கி வந்து கொண்டிருந்த சரக்கு ரயிலுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

## சுற்றுலாத்துறையை மேம்படுத்த

# 5 இலட்சம் விமான டிக்கெட்டுக்களை இலவசமாக வழங்கும் ஹொங்கொங்



(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் சுற்றுலா துறையை மேம்படுத்தும் நோக்கில் வெளிநாட்டினருக்கு 5 இலட்சம் விமான டிக்கெட்டுகளை இலவசமாக வழங்குவதாக அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சீனாவில் இருந்து பரவ தொடங்கிய கொரோனா வைரஸ் பாதிப்பு, உலகம் முழுவதும் பரவி ஒட்டு மொத்த மனித செயற்பாடுகளையும் முடக்கியது.

பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் பாதிப்பால் உருக்குலைந்த சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில், வெளிநாட்டினருக்கு 5 இலட்சம் விமான டிக்கெட்டுகளை இலவசமாக வழங்குவதாக ஹொங்கொங் அரசு அறிவித்துள்ளது.

இந்த சலுகைகள் சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இவ்வாறு நாட்டிற்குள் வரும் சுற்றுலாப் பயணிகள் நிச்சயமாக இரண்டு நாட்களாவது ஹொங்கொங்கில் தங்கி இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை அந்நாட்டு அரசு விதித்துள்ளது. (நி)

## ஆப்கானிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.1 ஆக பதிவாகி இருப்பதாக தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தஜிகிஸ்தான் பகுதியில் இந் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த விபரங்கள் இன்னும் வெளியாகவில்லை.

தொடர்ச்சியாக ஏற்படும் நிலநடுக்கங்கள் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

## சார்லஸ் முடிசூட்டு விழா

# தயாராகும் சிம்மாசனம் களைகட்டும் அரண்மனை

(லண்டன்)

இங்கிலாந்தில் நீண்ட காலமாக ராணியாக இருந்த 2 ஆம் எலிசபெத் கடந்த ஆண்டு தனது 93 ஆவது வயதில் மரணம் அடைந்தார்.

இதையடுத்து இங்கிலாந்து புதிய மன்னராக 2 ஆம் எலிசபெத்தின் மகன் 3 ஆம் சார்லஸ் நியமிக்கபட்டு பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய மன்னர் சார்லஸ் முடி சூட்டு விழா வருகிற மே மாதம் 6 ஆம் திகதி நடக்கவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகிறது. இந்த விழாவுக்கு சுமார் 700 ஆண்டுகள் ப்ழமை வாய்ந்த சிம்மாசனம் பயன்படுத்தப்படுகிறது.

தங்க முலாம் பூசப்பட்ட இந்த சிம்மாசனம் 1308 ஆம் ஆண்டு மன்னர்கள் முடிசூட்டு விழாவுக்காக தயார் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# படையெடுத்த சீன போர் விமானங்கள்!

# டிக்கு தயாராகும் தாய்வான்

தும் வகையில் சீனாவின் 25 போர் விமானங்கள் மற்றும் 3
அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சகம் குற்றம்

இந்நிலையில், தாய்வான் ஜல சந்தியை நோக்கி சீனா 25 போர் விமானங்கள் மற்றும் 3 போர்க் கப்பல்களை அனுப்பி வைத்து இருப்பதாக தாய்வானின் பாதுகாப்புத் துறை அமைச்சகம் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தாய்வான் பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள குறிப்பில், தாய்வானின் வான் பரப்பில் சீனாவின் 19 போர் விமானங்கள் நுழைந்துள்ளது.

அதைபோல சீனாவின் போர்க் கப்பல்களும் தாய்வான் ஜலசந்தியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சீனாவின் அத்து மீறல்களை தாய்வான் போர் விமானங்கள், கப்பல்கள் மற்றும் கடலோர ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் மூலமாக நெருக்கமாக கண்காணித்து பதிலடி கொடுத்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)





# நக்கு நேர் மோதி விபத்து
# அதிகளவானோர் காயம்
## த பகுதியில் துயரம்



இதில் ரயில் பெட்டிகள் ஒன்றோடொன்று தடம்புரண்டு தீப்பற்றியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் ரயிலில் பயணித்த 32 பேர் இதுவரை உயிரிழந்த நிலையில், ஏராளமானோர் காயமடைந்தனர்.

விபத்து நேரிட்ட இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புப் படையினர், ரயில் பெட்டிக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (நி)



1399 ஆம் ஆண்டு மன்னர் ஹென்றி இந்த சிம்மாசனத்தில் அமர்ந்து முடிசூட்டி கொண்டார். அதன்பிறகு 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்த சிம்மாசன நாற்காலி சேதம் அடைந்தது.

பின்னர் இந்த சிம்மாசனத்தின் அடித்தளம் மாற்றி அமைக்கப்பட்டது. இதன் மூலையில் சிங்க உருவம் பொருத்தப்பட்டு உள்ளது.

பல சிறப்புகளை பெற்ற சிம்மாசனத்தை புதுப்பிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மே மாதம் நடைபெறும் விழாவில் மன்னர் சார்லஸ் இதில் அமரவைக்கப்பட்டு முடி சூட்டப்படுவார். அப்போது அவரது தலையில் கிரீடம் வைக்கப்படும்.

இந்த விழாவால் லண்டன் பக்கிம்காம் அரண்மனைகளை கட்டத் தொடங்கி உள்ளது. (நி)

# துருக்கி பூகம்பத்துக்குப் பின் 10,000 நில அதிர்வுகள் பதிவு



(அங்காரா)

கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தின் பின்னர் மூன்று வாரங்களில் 10,000 இற்கும் அதிகமான அதிர்வுகள் பதிவாகியுள்ளன.

அதன் பிறகு அதிர்வுகளின் அதிர்வெண் மற்றும் தீவிரம் குறைந்துள்ளது. ஆனால் பூகம்பம் தொடர்ந்து அச்சுறுத்தலாகியுள்ளது.

கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி துருக்கி மற்றும் வட மேற்கு சிரியாவை 7.8 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த பூகம்பம் தாக்கியது.

குறித்த பூகம்பத்தில் சிக்கி துருக்கி மற்றம் வடமேற்கு சிரியாவில் 50,000 இற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர்.

இந்நிலையில், பூகம்பத்தின் பின்னர் 24 மணி நேரத்திற்குள் 570 இற்கும் மேற்பட்ட நிலஅதிர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், மூன்று வாரங்களில் 10,000 இற்கும் மேற்பட்ட நிலஅதிர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சக்தி வாய்ந்த பூகம்பங்கள் ஏற்படும்போது அவைகளைப் பின் தொடர்ந்து மேலும் சில அதிர்வுகள் பொதுவாக ஏற்படுகின்றன.

சக்தி வாய்ந்த பூகம்பத்துடன் ஒப்பிடும்போது பல பின் அதிர்வுகள் சிறியதாக இருக்கலாம். ஆனால் சில நில அதிர்வுகள் துருக்கியில் இருந்தது போல் கடுமையான மற்றும் அழிவுகரமானதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. துருக்கி பூகம்பம் பூமியின் மேற்பரப்பில் ஒரு தனிச் சிதைவை ஏற்படுத்தியுள்ளது.

பூகம்பவியலாளர்கள் பின் அதிர்வுகளை ஒரு பெரிய பூகம்பத்தால் தூண்டப்பட்ட பூகம்பங்கள் என வரையறுக்கின்றனர். அவை நேரம் மற்றும் இருப்பிடத்தில் நெருக்கமாக இருக்கும். இந்த அதிர்வுகளில் பல பெரியதாக இருப்பதால், அவை பின் அதிர்வுகளின் தொடர் சங்கிலியை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கின்றனர். (நி)

# இத்தாலி பிரதமர் மெலோனிக்கு இந்தியாவில் உற்சாக வரவேற்பு

(டில்லி)

இந்தியா வந்த இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனிக்கு இந்திய அதிகாரிகளால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாட்கள் பயணமாக, நேற்று வியாழக்கிழமை டில்லி விமான நிலையத்திற்கு வந்த இத்தாலிய பிரதமர், துணை பிரதமர், வெளியுறவு அமைச்சர் அன்டோனியோ தாஜானி, அதிக சக்தி வாய்ந்த வணிக பிரதிநிதி களை, சுகாதாரத் துறை இணை அமைச்சர் பாரதி பவார் வர வேற்றார். கடந்த 2018 ஆம் ஆண்டுக்கு பிறகு இத்தாலி பிரதமர் ஒருவர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும்.

இந்தியாவும் இத்தாலியும் இருநாட்டு உறவு களை நிறுவி இந்த ஆண்டுடன் 75 ஆண்டுகள் பூர்தியாகியுள்ளமை நினைவு கூரத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 4 தமிழக மீனவர்களின் படகுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக கடற்றொழிலாளர்களின் படகுகளை மீள கையளிக்கும்போது, அவற்றின் பராமரிப்பு செலவுக்கான பணமாக 4 இலட்சத்து 79 ஆயிரத்து 500 ரூபாய் அறவிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது மன்றில் பிரசன்னமாகி இருந்த நான்கு உரிமையாளர்களின் படகுகளை உரிமையாளர்களிடம் கையளிக்க மன்று உத்தரவிட்டது.

அதன் போது , இலங்கை கடற்பரப்பில் இது வரை காலமும் நிறுத்தி வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டமைக்கான இரண்டு படகுகளுக்கு தலா ஒரு இலட்சத்து 48 ஆயிரம் ரூபாவும் மற்றுமொரு படகுக்கு ஒரு இலட்சத்து 29 ஆயிரம் ரூபாவும் மற்றைய படகுக்கு 54 ஆயிரத்து 500 ரூபாவும் பராமரிப்பு செலவாக செலுத்த வேண்டும் என மன்று கட்டளையிட்டுள்ளது. (4-6-33)

# மீன் வளர்ப்பு எனும் போர்வையில் சட்டவிரோத மணல் அகழ்வு

## பேராலை கிராம மக்கள் போராட்டம்

(முறிகண்டி)

**நன்னீர் மீன் வளர்ப்பு எனும் போர்வையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக தெரிவித்து கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பேராலை கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**




குறித்த கிராமத்தில் அமைந்துள்ள புதுக்காட்டுக்குளத்திலிருந்தே அதிகளவான மணல் அகழ்வு செய்யப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். நன்னீர் மீன்வளர்ப்பிற்காக குறித்த குளம் அபிவிருத்தி செய்யப்படுவதாக காண்பித்து, அங்கு அகழ்வு மேற்கொள்ளப்படும் மணல் விற்பனை செய்யப்படுவதாக தெரிவித்தே குறித்த பகுதி கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் நேற்று A9 வீதியில் இடம் பெற்றது.

குறித்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுக்கொண்டிருக்கையில் கனரக வாகனங்களில் பெருந்தொகையான மணல் ஏற்றப்பட்டு வாகனங்கள் பயணிப்பதை அவதானிக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த வாகனங்களை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது குறித்த பகுதிக்கு சென்ற சிலர் போராட்டக்காரர்களை அச்சுறுத்தியதுடன், வாகனங்களை செலுத்தி மக்கள் மீது மோதும் வகையில் நடந்து கொண்டனர்.

குறித்த போராட்டத்தை தொடர்ந்து ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட மகஜர் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் மூலம் அனுப்பி வைப்பதற்காக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சயந்தினியிடம் கையளித்தனர். (4-6-100)

# ஆளுநரின் செயலாளருடன் வன்னேரிக்குளம் பொதுஅமைப்புகள் சந்திப்பு




(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மருத்துவமனைக் கட்டடம், மண்டக்கல்லாறு உவர் நீர் தடுப்பணை ஆகியவை மிகத் துரித கதியில் அமைக்கப்படும் என ஆளுநரின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

வன்னேரிக்குளம் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கடந்த 28 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து கிராமத்தின் அபிவிருத்தி திட்டங்களில்காணப்படும்தாமதம்தொடர்பாக கலந்துரையாடி இருந்தனர்.

இதன் விளைவாக 54 மில்லியன் ரூபாய் பெறுமதியில் அமைக்கப்படவுள்ள வன்னேரிக்குளம் மருத்துவமனைக் கட்டடம் மிக துரித கதியில் ஒப்பந்தம் கோரப்பட்டு கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் பல தசாப்த கால கோரிக்கையாக இருந்த மண்டக்கல்லாறு உவர் நீர் தடுப்பணை அமைப்பதில் இருக்கும் தடைகளை ஆராய்ந்து குறித்த வேலைத்திட்டமும் துரித கதியில் ஆரம்பிக்கப்படும் எனவும் கௌரவ ஆளுநரின் செயலாளர் தெரிவித்தார். (4-6-350)

# பள்ளிக்குடா இறங்குதுறையினை அபிவிருத்தி செய்து தாருங்கள்

## அப்பகுதி கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடா இறங்குதுறையினை அபிவிருத்தி செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடா இறங்குதுறை அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால் கடற்றொழிலுக்கு செல்லும் கடற்றொழிலாளர்கள் தமது படகுகளை கடலுக்கு கொண்டு செல்வதிலும் படகுகளை கரை சேர்ப்பதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே அப்பகுதியில் உள்ள இறங்குதுறையினை அபிவிருத்தி செய்து தருமாறு அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதாவது கடலில் இருந்து கரையை வந்தடைவதற்கு அமைக்கப்பட்ட ஆழமான வாய்க்கால் பகுதி மண் நிரவிக் காணப்படுகின்றது என்றும் இதனை ஆழமாக்கி தருமாறும் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-315)

# ஆபத்தை ஏற்படுத்தும் இடமாக முல்லை வட்டுவாகல் பாலம்

## புனரமைக்குமாறு பல்வேறு தரப்பு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஏ-35 வீதியில் விபத்துக்கள் ஏற்படும் வகையில் காணப்படும் வட்டுவாகல் பாலத்தினை புனரமைக்க இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டாத நிலையில் குறித்த பாலம் தொடர்ந்தும் ஆபத்தானதாக காணப்படுவதுடன் அடிக்கடி விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏ-35 வீதியில் அமைந்துள்ள குறித்த வட்டுவாகல் பாலமானது மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதுடன் இதில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருவதுடன் உயிரிழப்புக்களும் கூட நிகழ்ந்துள்ளன.

எனவே இப்பாலம் புனரமைக்கப் படவேண்டுமென்ற கோரிக்கை கடந்த 13 வருடங்களாக பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் குறித்த பாலத்தினை புனரமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி தேவையென கடந்த 2016 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அதற்கான அமைச்சரவை அனுமதிகளும் பெறப்பட்ட போதும் புனரமைப்புப் பணிகள் எதுவும் முன்னெடுக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே இதனை புனரமைப்பதற்கான நிதியை பெற்று விரைந்து புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-315)

# குடமுருட்டி குளத்தின் கீழ் 513 ஏக்கரில் சிறுபோகம்

(அக்கராயன்)

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்திற்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது.

பூநகரி பிரதேச செயலாளர் த.அகிலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன் உட்பட துறைசார் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசனப் பொறியியலாளர், குடமுருட்டிக் குளத்தினை பொறுத்த வரையில் அணைக்கட்டு, வான் பகுதி, வாய்க்கால்கள் சேதமடைந்து காணப்படுகின்றன. நிதி கிடைக்கின்ற போது குள வேலைகளை முன்னெடுக்க முடியும். அக்கராயன் குளத்தில் குறைவான நீர் மட்டம் காணப்படுவதனால் நீர் குடமுருட்டிக் குளத்திற்கு வரும் என எண்ணி பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டாம். உள்ள நீர் வளத்தினை சரியான முறையில் பயன்படுத்தி குடமுருட்டிக் குள விவசாயிகள் சிறுபோகத்தில் வெற்றி அடைய வேண்டும் எனவும் தெரிவித்தார். இதே வேளை 513 ஏக்கரில் நெற் செய்கையும் 50 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்வது என கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு வடக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### வெளிவாரியாக ஆட்சேர்ப்பு

மேற்படி விடயம் தொடர்பாக எமது சங்கத்தின் பணிவெற்றிடமாக காணப்படும் கீழ்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. எனவே இவ் பதவிகளுக்கு தகைமை யுடையவர்கள் இருப்பின் உடன் 2023.03.20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது என்பதனை அன்புடன் அறியத் தருகின்றேன்.

1.கணக்காளர் 104/6 - 01
சம்பளஅளவுத் திட்டம்:- 22045-290×10-340×10-28345
தகைமைகள்

அ:- கூட்டுறவு ஊழியர் 7ஆவது சம்பளத்திட்டப் பதவியில் நிதி முகாமையாளர்/ கணக்காளர்/ உள்ளகக் கணக்காய்வாளர்/ பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 08 வது சம்பளத்திட்டப் பதவியில் கணக்காளர்/ உள்ளகக்கணக்காய்வாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ:- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/ சமமான தகைமை இத் தகைமையானது கணக்கியல்/ வியாபார புள்ளிவிபரவியல்/ வியாபார கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இலங்கை தொழில்நுட்ப கல்லூரியின் கணக்கியலான டிப்ளோமா/ இதற்கு சமமான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா சித்தி.

அல்லது

இ:-கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம். இதில் 02 ஆண்டு காலம் கணக்காளர்/ உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம்.

க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றின் கணக்கியல் கணக்காய்வுத் துறையில் ஏமு ஆண்டு கால அனுபவம்.இதில் 02 ஆண்டு காலம் கணக்காளர் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது ஏழு ஆண்டு கால அனு பவம்.

2.கிராமிய வங்கி எழுதுநர் 300/13:- 01
சம்பள அளவுத்திட்டம்: 18360-160×10-170×10-21660
தகைமைகள்

அ:- கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 2 வருட அனுபவம். அத்துடன் கணணியை உபயோகித்து பணியாற்றும் ஆற்றலை பெற்றிருத்தல் வேண்டும்.
கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 4 வருட அனுபவம். அத்துடன் கணணியை உபயோகித்து பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

அ (ii):- கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் கணணிப்பக்க உருவாக்குநர் பதவியில் 2வருட அனுபவம்/கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் கணணிப்பக்க உருவாக்குநர் பதவியில் 4 வருட அனுபவம்.

அல்லது

ஆ:- கூட்டுறவு ஊழியர் சாதாரணதர பத்திரப் பரீட்சையில் சித்தி/க.பொ.த. சாதாரணதரப் பத்திரப் பரீட்சையில் தமிழ். கணிதம் உட்பட 03 திறமை சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தி.அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 03 மாதங்களுக்கு குறையாத MS office கற்கைநெறியினை பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

பிரிவு அல்லது (ஆ) பிரிவு தகைமைப் பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிக்கான காலத்திலும் மாகாணகூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்படும் கிராமிய வங்கியில் கற்கைநெறி ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3.எழுதுநர் 302/ 12:-01
சம்பள அளவுத்திட்டம்: 18820-170×10-185×10-22370
தகைமைகள்

அ:- கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்ட பதவியில் எழுதுநர்/கணக்காய்வு எழுதுநர்/ காசாளர்/ கணணி பக்க உருவாக்குநர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்கு பதிவாளர் எழுதுநர்/காசாளர்/ கணணி பக்க உருவாக்குநர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

ஆ:- அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல் /கணக்கு பதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

இ:- கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.

ஈ:- கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம். தமிழ் மொழி என்பனவற்றை உள்ளடக்கிய 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

04.விற்பனை உதவியாளர் 308/16 : 03
சம்பள அளவுத்திட்டம்-16975-135×10-150×10-19825
தகைமைகள்

அ:-கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்ட பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.

ஆ:- கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகள் மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி. கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

05.சாரதி 312/14:- 01
சம்பள அளவுத்திட்டம்-17900-155×10-165×10-21100
அ:-5 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து/லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்

06.காவலாளி 315/15:- 01
சம்பள அளவுத் திட்டம்-17435-145×10-160×10-20485
அ:-கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்ட பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்ட பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ:-05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
வயதெல்லை 18-45 வயதிற்குட்பட்டவர்கள்.
விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய முடிவுத் திகதி - 2023.03.20
அனுப்ப வேண்டிய முகவரி (பதிவுத் தபால்)

(சி-6092)

**தலைவர்,முல்லைத்தீவு வ.க்கு,பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**வலையன் மடம், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகளுக்கான

# இலவச எரிபொருள் வழங்கும் பணி ஆரம்பம்



(கொழும்பு)

விவசாயிகளுக்கு இலவச எரிபொருள் வழங்குவது தொடர்பான டோக்கன்கள் வழங்கும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று முதல் விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்கும் வகையில் டோக்கன்களை வழங்குவதற்கு விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நாட்டில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்துவதற்காக சீன அரசாங்கம் 6.98 மில்லியன் லீற்றர் டீசலை இலவசமாக வழங்கியிருந்தது.

அனைத்து விவசாயிகளும் நியமிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும் என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# ஐக்கிய நாடுகளின் படையில் இணையும் 125 இலங்கை இராணுவத்தினர்

(கொழும்பு)

லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகளின் படையில் இணைவதற்காக இலங்கை இராணுவத்தின் 14 ஆவது தலைமையக பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த 125 பேர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து லெபனான் நோக்கிப் புறப்பட்டனர்.

இந்தப் படையில் 10 அதிகாரிகள் மற்றும் 115 வீரர்கள் அடங்குவர். அவர்களில் 2 பெண் அதிகாரிகள் மற்றும் 8 பெண் இராணுவத்தினரும் உள்ளடங்குவர்.

மேலும், லெபனான் இடைக்காலப் படைகளின் கடமைகளுக்காக வெடிபொருட்கள் மற்றும் போதைப் பொருட்களைக் கண்டறிய பிரத்தியேகப் பயிற்சி பெற்ற நர்ன்கு நாய்களும் சென்றன.

இந்தக் குழு நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து எத்தியோப்பியன் ஏயார் லைன் விமானத்தில் லெபனானுக்குப் புறப்பட்டது. (நி)

# தனியார் வங்கிகளில் கணக்குகளை திறக்கலாம்

## அரச நிறுவனங்களுக்கு அனுமதி

(கொழும்பு)

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன் பத்திரங்களை வழங்குவதில் தடை ஏற்பட்டால், அரச நிறுவனங்களுக்கு தனியார் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேவை ஏற்பட்டால் நிதி அமைச்சின் அனுமதியைப் பெற்று தனியார் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் சட்டச் சபைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மருந்து, எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களை கடன் கடிதங்கள் இன்றி கொள்வனவு செய்ய முடியாது என்பதால், நிதி நடவடிக்கைகளில் இடையூறு ஏற்படும் அபாயம் பொதுமக்களின் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அமைச்சரவைக் கூட்டத்தின் போது அமைச்சர்கள் எடுத்துரைத்தனர்.


இதன்படி, முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்களை கருத்திற் கொண்டு, அவசரநிலை ஏற்பட்டால் தனியார் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிப்பதற்கும் பராமரிப்பதற்கும் அரச நிறுவனங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 117







"தேவி! உன் புதல்வன் செய்கையைப் பார்த்தாயா? என் பாட்டனார், உலகமெல்லாம் புகழ்பெற்ற பராந்தக சக்கரவர்த்தி. அரண்மனையில் சேர்ந்திருந்த தங்கத்தையெல்லாம் அளித்துத் தில்லை அம்பலத்துக்குப் பொன் கூரை வேய்ந்து, பொன்னம்பலம் ஆக்கினார். நம்முடைய குலத்தில் தோன்றிய பெரியவர்கள் யாரும் தாங்கள் வசிக்கும் அரண்மனையைப் பொன்னால் கட்டிய தில்லை. அரண்மனை கட்டுவதைக் காட்டிலும் ஆலயம் எடுப்பதையே முக்கியமாகக் கருதினார்கள்.

ஆனால் ஆதித்த கரிகாலன் இப்படிச் செய்திருக்கிறான்! ஆகா! இந்தத் தெய்வ நிந்தனைக்கு என்ன பரிகாரம் செய்வது?" என்றார். மகனிடமிருந்து ஓலை வந்தது என்பதை கேட்டுச் சிறிது மலர்ச்சியடைந்த தேவியின் முகம் மறுபடி முன்னைக் காட்டிலும் அதிகமாக வாடியது. மறுமொழி ஒன்றும் அவளால் சொல்ல முடியவில்லை.

அச்சமயத்தில் வந்தியத்தேவன் தைரியமும் துணிவும் வரவழைத்துக் கொண்டு, "பிரபு! தங்கள் திருக்குமாரர் செய்தது அப்படியொன்றும் தவறில்லையே? உசிதமான காரியத்தையே செய்திருக்கிறார். மகனுக்குத் தாயும் தந்தையுமே முதன்மையான தெய்வங்கள் அல்லவா? ஆகையால் தாங்களும் தேவியும் வசிப்பதற்காகத் தங்கள் புதல்வர் பொன் மாளிகை கட்டியது முறைதானே? என்றான்.

சுந்தர சோழர் புன்னகை பூத்து, "தம்பி! நீ யாரோ தெரியவில்லை. மிக்க அறிவாளியாயிருக்கிறாய். சாதுர்யமாகப் பேசுகிறாய். ஆனால் மகனுக்குத் தாய் தந்தை தெய்வமே என்றாலும், மற்றவர்களுக்கு இல்லை தானே? எல்லோரும் வழிபடும் தெய்வத்துக்கு அல்லவா பொன் கோயில் எடுக்க வேண்டும்!" என்றார்.

"பிரபு! மகனுக்குத் தந்தை தெய்வம் மக்களுக்கெல்லாம் அரசர் தெய்வம். அரசர்கள் திருமாலின் அம்சம் பெற்றவர்கள் என்று வேத புராணங்கள் சொல்லுகின்றன. ஆகையால் அந்த வகையிலும் தங்களுக்குப் பொன்மாளிகை எடுத்தது பொருத்தமானதே!" என்றான் நம் வீரன்.

சுந்தர சோழர் மறுபடியும் மலையமான் திருமகளை நோக்கி, "தேவி! இந்தப் பிள்ளை எவ்வளவு புத்தி சாலி, பார்த்தாயா? நம்முடைய ஆதித்தனுக்கு இவனையொத்தவர்களின் உதவியிருந்தால், அவனைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அவனுடைய அஜாக்கிரதை சுபாவத்தைப் பற்றியும் விசாரப்பட வேண்டியதில்லை!" என்றார்.

பிறகு, வந்தியத்தேவனைப் பார்த்து, "தம்பி! பொன் மாளிகை கட்டியது உசிதமானாலும் உசிதமில்லாவிட்டாலும் நான் காஞ்சிக்கு வருவது சாத்தியமில்லை. நீதான் பார்க்கிறாயே! எப்போதும் படுத்த படுக்கையாக இருந்து வருகிறேன். நெடுந்தூரப் பிரயாணத்தை மேற்கொள்ளுதல் இயலாத காரியம்.

ஆதித்தன் தான் என்னைப் பார்ப்பதற்கு இங்கே வந்தாக வேண்டும். அவனைக் காண்பதற்கு எங்களுக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது. நாளைக்கு மீண்டும் வா! மறு ஓலை எழுதி வைக்கும்படி சொல்லுகிறேன்!" என்றார்.

இச்சமயத்தில், கூட்டமாகப் பலர் தரிசன மண்டபத்தை நெருங்கி வருவதை வந்தியத்தேவன் அறிந்தான். ஆகா! அந்தப் புலவர் கூட்டம் வருகிறது போலும்! அவர்களுடன் ஒருவேளை சின்னப் பழுவேட்டரையரும் வருவார். அப்புறம் தான் சொல்ல வேண்டியதைச் சொல்ல முடியாமலே போய் விடலாம்! நாலு வார்த்தையில் சுருக்கமாக இப்போதே சொல்லிவிட வேண்டியது தான்! இவ்விதம் சில விநாடிப் பொழுதில் சிந்தித்து முடிவு செய்து, "சக்கரவர்த்தி! தயவு செய்யுங்கள்! கருணைகூர்ந்து என் விண்ணப்பத்தைக் கேளுங்கள். தாங்கள் அவசியம் இந்தத் தஞ்சையிலிருந்து கிளம்பிவிட வேண்டும். இங்கே தங்களை அபாயம் சூழ்ந்திருக்கிறது! அபாயம்! அபாயம்!" என்றான்.

அவன் இவ்விதம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சின்னப் பழுவேட்டரையர் தரிசன மண்டபத்துக்குள் பிரவேசித்தார். அவரைத் தொடர்ந்து புலவர்கள் வந்தார்கள். வந்தியத்தேவன் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் கோட்டைத் தளபதியின் காதில் விழுந்தன. அவருடைய முகத்தில் கோபக் கனல் சுவாலை விட்டது.


(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திறமையான குள்ளன்

(நேற்றைய தொடர்ச்சி)



மந்திரச் செருப்பை அடையாளத்திற்கு என்னிடம் தந்தான். "இதைக் காட்டினால் என் தாய் நிறைய பொருள் தருவார். வாங்கிக் கொண்டு ஓடி வா. அப்பொழுது தான் நான் உயிர் பிழைப்பேன் என்று என்னை அனுப்பினார் என்று பரபரப்புடன் சொன்னான் அவன்.

"ஐயோ! மகனே! உனக்கு ஆபத்தா? உன்னை விட எனக்குப் பொருளா பெரிது?" என்று அலறினாள் அவள். பெரிய சாக்குப் பையில் பொற்காசுகளை நிரப்பி அவனிடம் தந்தாள்.

அந்தப் பையை வாங்கிய அவன், "இனி கவலைப்பட வேண்டாம். உங்கள் மகன் கண்டிப்பாக வந்து சேருவார்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான். மந்திரச் செருப்பின் உதவியால் அண்ணன்கள் இருந்த இடத்தை அடைந்தான் அவன். அரக்கன் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டு இருந்தான்.

"இனி இந்த அரக்கனால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. மந்திரச் செருப்பை இழந்து விட்டான். அவன் தேடி வைத்த செல்வத்தையும் கொண்டு வந்து விட்டேன்.

எல்லோரும் என்னை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்றான் குள்ளன். அண்ணன்கள் எல்லோரும் குள்ளனை நன்றாகப் பிடித்துக் கொண்டார்கள். "மந்திரச் செருப்பே! நாங்கள் எங்கள் வீட்டை அடைய வேண்டும்" என்றான் அவன். சிறிது நேரத்தில் எல்லோரும் வீட்டை அடைந்தார்கள். அவர்கள் தந்தையும் தாயும், "மகன்களே! காட்டில் என்ன பாடுபடுகிறீர்களோ? வறுமையினால் தான் இந்தக் கொடுமையைச் செய்து விட்டோம்" என்று அழுது புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

கதவு தட்டும் ஓசை கேட்டு அவர்கள் கதவைத் திறந்தார்கள். ஏழு மகன்களும் நிற்பதைக் கண்டு அவர்களைக் கட்டித்தழுவிக்கொண்டார்கள்.

"அம்மா! இனி நமக்கு வறுமையே இல்லை. பல தலைமுறைக்குத் தேவையான பொற் காசுகளுடன் வந்து இருக்கி றோம்" என்றான் குள்ளன்.

சாக்கைப் பிரித்தான் விறகுவெட்டி. அதற்குள் ஏராளமான பொற்காசுகள் மின்னின. எதிர்பாராமல் கிடைத்த இந்த நல் வாழ்வை எண்ணி எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

தூக்கம் கலைந்து எழுந்தான் அரக்கன். தன் காலில் மந்திரச் செருப்பு இல்லாததைக் கண்டு திடுக்கிட்டான். எப்படியோ துன்பப் பட்டு தன் வீட்டை அடைந்தான் அவன்.

வாசலிலேயே காத்திருந்த அவன் தாய், "மகனே! உன்னை விட்டு விட்டார்களா? நாம் சேர்த்து வைத்த பொற்காசுகளை அப்படியே கொடுத்து அனுப்பினேன்" என்றாள்.

"என்னம்மா சொல்கிறாய்? நாம் சேர்த்து வைத்த பொற்காசுகள் போய்விட்டனவா? என்ன நடந்தது?" என்று அதிர்ச்சியுடன் கேட்டான் அவன்.

நடந்ததை எல்லாம் சொன்னாள் அவள்.

"அம்மா! அந்தச் சிறுவர்கள் நம்மை நன் றாக ஏமாற்றி விட்டார்கள். நாமே நம் அருமைக் குழந்தைகளைக் கொன்று விட்டோம். என் மந்திரச் செருப்பை இழந்து விட்டேன். சேர்த்து வைத்த பொற்காசுகளும் போய்விட்டன. என்ன செய்வது?" என்று அழுதுகொண்டே கேட்டான் அவன்.

"மகனே! ஒரே ஒரு நாள் அவர்கள் இங்கே இருந்தார்கள். நமக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டு விட்டது? இனி அவர்கள் வழிக்கே போகாமல் இருப்பது நமக்கு நல்லது" என்று அறிவுரை சொன்னாள் அவள்.

"நீ சொன்னபடியே நடக்கிறேன்" என் றான் அவன்.

பிறகென்ன, விறகு வெட்டி தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந் தான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்கிறான். ~ நார்மன் வின்சென்ட் பீல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேவகுருவும் அசுரகுருவும் ஒன்றாக நின்றபோது...

வானத்தில் வியாழனும் வெள்ளியும் ஒரு நேர்கோட்டில் மிகவும் நெருக்கமாக நின்ற அற்புதமான காட்சியை நேற்றைய இரவுப் பொழுதில் காணமுடிந்தது.

இந்த அபூர்வமான காட்சியை பலரும் கண்டு மகிழ்ந்திருப்பர்.

வியாழ கிரகமும் வெள்ளியும் ஒன்றாகக் காட்சியளிப்பதைப் பார்த்தபோது, ஓ! இது நம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஒற்றுமையின் அவசியத்தை உணர்த்துவதற்கான காட்சி என்று எண்ணத் தோன்றியது.

இதை நாம் கூறும்போது, வானத்தில் வியாழனும் வெள்ளியும் ஒன்றாகக் காட்சியளிப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது.

ஒற்றுமைக்கும் அதற்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால்; வியாழன் தேவகுரு. தேவர்களின் குருவாக இருப்பதால் வியாழனைக் குரு என்று அழைக்கின்ற வழமையும் உண்டு.

மாறாக வெள்ளி அசுர குரு. அசுர குருவை சுக்கிரன் என்று அழைப்பர்.

அதேநேரம் தேவர்களும் அசுரர்களும் எங்ஙனம் ஒருவருக்கொருவர் பகை கொண்டவர்களோ, அதே பகை வியாழ குருவுக்கும் வெள்ளியாகிய சுக்கிரனுக்கும் உண்டு.

ஆக, குருவும் சுக்கிரனும் பகைக் கிரகங்கள்.

இவ்வாறு பகைக் கிரகங்களாக இருக்கின்ற வியாழனும் வெள்ளியும் காலவோட்டத்தில் – சூழ்நிலை மாற்றத்தில் – தேவையின் அடிப்படையில் ஒன்றுசேர வேண்டியுள்ளது.

எமக்குள் வெறுப்பும் பகையும் இருந்தாலும் நம் மக்களின் நலன்கருதி ஒற்றுமைப்படுவது அவசியமானது.

இதுபற்றி அவர்களிடம் கேட்டால்; அவர்கள் சொல்வது இதோ! பாருங்கள். தேவர்களின் குருவாகிய வியாழ பகவானாகிய யானும் அசுரர்களின் குருவாகிய சுக்கிராச்சாரியரும் ஒரு வீட்டில் தங்கியுள்ளோம்.

எங்களைப் பகைக் கிரகங்களாகப் பார்த்த உங்களுக்கு எங்களின் ஒற்றுமை ஆச்சரியமாக இருக்கலாம்.

ஆனால் உலக அசைவில் நாம் ஒன்றுசேர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எங்களிடம் ஒற்றுமை ஏற்படவில்லையாயின், ஏனைய கிரகங்களின் இயங்குநிலை குழம்பி இப்பிரபஞ்சம் குலைந்தும் அழிந்தும் விடும்.

ஆகையால் கால சூழ்நிலை கருதி ஒற்றுமைப்படுவது அவசியம்.

எனவே தமிழ் மக்களின் நலன்கருதி அதிலும் சமகால சூழ்நிலை கருதி தமிழ் அரசியல் தரப்புகளும் ஒற்றுமைப்பட வேண்டும்.

நாம் ஒற்றுமைப்படாமல் இருப்போமாயின், அதனால் ஏற்படுகின்ற இழப்பும் பாதிப்பும் தமிழ் மக்களுக்கானது.

ஆகவே தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்பட வேண்டும்.

இதனை வலியுறுத்தவே வானத்தில் குருவும் சுக்கிரனும் ஒன்றாகக் காட்சி கொடுத்து நம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு உபதேசம் செய்துள்ளன.

# ராஜபக்ஷ அரசாங்கம் மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரழித்துவிட்டது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

ராஜபக்ஷ அரசாங்கம் மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரழித்து விட்டதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ரக்வான கொடகவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷ அரசாங்கமும், ராஜபக்ஷ நிழல் அரசாங்கமும் இந்நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரழித்து விட்டதாகவும், எல்லா வகையிலுமான வரிகளும் அதிகரிக்கப்பட்டு மின்கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், சாதாரண மக்கள் முதல் பாடசாலைப் பிள்ளைகள் வரை அனைவரும் ஆதரவற்ற நிலையில் இருக்கும் இவ்வேளையில், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பொருளாதாரத்தை விரிவடையச் செய்து, மனிதாபிமான முதலாளித்துவ அமைப்பில் செல்வப் பெருக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்றார்.

மேலும், சமூக ஜனநாயக கட்டமைப்பில் வளங்கள் சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டு நாட்டில் நீதி நியாயம் கோலோச்சும் அரசாங்க பொருளாதார முறைமை ஏற்படுத்துவோம் என்றார்.

மனிதாபிமான முதலாளித்துவமும் சமூக ஜனநாயகமும் மட்டுமே இந்நேரத்தில் நாட்டிற்கு ஒரே வழி, ஒரே "பதில்" எனவும், அனைவருக்கும் பயனளிக்கும் வளமான சகாப்தத்தை உருவாக்கி, கிராமம், நகரத்தைக் கட்டியெழுப்பி நாட்டைக் கட்டியெழுப்பும் புதிய எண்ணக்கருவாகும் எனவும், இதற்காக மக்கள் ஒன்றிணைய வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

ஒரு நாடாக, தொழில்நுட்பம், அறிவு மற்றும் புதிய முறைமைகளின் அடிப்படையிலேயே நாம் முன்னேற வேண்டும் எனவும், அறிவு மற்றும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தின் ஊடாக ஏற்றுமதி ஊக்குவிப்பு முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சமுத்திரங்களை மையமாகக் கொண்ட நீலப் பொருளாதாரம் மற்றும் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட பசுமைப் பொருளாதார அமைப்புக்கு மாறுவதன் மூலம் காபன் வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதன் ஊடாக உலகின் முன்னணி நிறுவனங்களின் ஆதரவை எமது நாடு பெற முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நமது நாட்டு இளைஞர்களை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியிலான அறிவாற்றலை வலுப்படுத்தி வறுமையை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## யாழ். பல்கலைக்கழக தொழிற் சந்தை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான உள்ளகத் தொழில்சார் பயிற்சிகளை வழங்கமுன்வரும் நிறுவனங்களை அடையாளங்காணும் நோக்குடனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பட்டதாரிகளுக்கான நிரந்தரமான மற்றும் தற்காலிக, முழுநேர மற்றும் பகுதிநேர வேலைவாய்ப்புக்களுக்கான வாய்ப்புக்களை அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொடுக்கும் இலக்குடனும் முதற் தடவையாக 'தொழிற் சந்தை 2023' ('Career Fair 2023') இன்று வெள்ளிக்கிழமை கலைப்பீடத்தில் நடைபெறவுள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியிலான 'மேன்மைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி ஊடாக உயர் கல்வியைத் துரித வளர்ச்சிக்குட்படுத்துதல்' திட்டத்தின் உதவியில் இத்தொழிற்சந்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

நாடளவியரீதியில் 85ற்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்கும் இத்தொழிற்சந்தையில் அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், சபைகள், தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள், விருந்தோம்பல் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள், ஹோட்டல்கள், உயர் கல்வி நிறுவனங்கள், தனியார் பாடசாலைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்துறையினர் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

"தொழிற் சந்தை 2023" இன் தொடக்க விழாவில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார்.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில், கலைப்பீடத்தில் நான்காம் வருடம் மற்றும் மூன்றாம் வருட சிறப்புக்கலை மற்றும் பொதுக்கலை பயிலும் மாணவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்புக்கலை, பொதுக்கலைப் பட்டங்கள் பெற்று, வேலை வாய்ப்புக்களுக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகளும் நேரடிப் பயனாளிகளாக இணைந்து கொள்ளவிருக்கின்றனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில் கல்லூரி வீதி, தம்பசிட்டி, சாலம்பை, தம்பசிட்டி சந்தி, வி.எம்.வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** பளை காற்று மின்னாலையிலும் **வவுனியா பிரதேசத்தில்** அகத்திமோட்டை, கூராய், கோவில்குளம், சீது விநாயகங்குளம், விடத்தற்தீவு-மருத்துவமனை, விடத்தற்தீவு-கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** இறால் [illegible] டல் கோபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 ஆண்டுகளிற்கு பின் இலங்கை வந்தடைந்த சீன சுற்றுலாப் பயணிகள்

கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, சீன சுற்றுலாப் பயணிகளின் முதல் குழு இலங்கைக்கு வந்துள்ளது.

இலங்கையின் விசேட விமானம் மூலம் 117 சீன சுற்றுலாப் பயணிகள் நேற்று முன்தினம் இரவு இலங்கை வந்தடைந்துள்ளனர்.

சுற்றுலா அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, இலங்கைக்கான சீனத் தூதுவர் சி சாங் ஹொங் உள்ளிட்டோர் குழுவை வரவேற்றனர்.

அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ, கோவிட் தொற்றை அடுத்து சீனாவின் சுற்றுலாப் பயணிகள் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

3 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் உலகம் முழுவதும் பயணம் செய்ய வாய்ப்பு உள்ளது என்றார். (ம-7)

## அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாய் பெறுமதி உயர்வு

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி கணிசமாக அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை ரூபாய் 343.97 ஆகவும் விற்பனை விலை 356.73 ரூபாயாகவும் நேற்று காணப்பட்டது.

நாட்டின் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் அண்மைய நாட்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி கணிசமாக அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில், எதிர்காலத்தில் ரூபாயின் மதிப்பு மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

# தாய்லாந்தில் வேலைவாய்ப்பு எனக் கூறி கடத்தப்பட்ட இலங்கை இளைஞர்கள்

## இதுவரை 15 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

தென்கிழக்காசிய நாடான லாவோஸில் இடம்பெற்றாக கூறப்படும் இலங்கையர்களுக்கு எதிரான மனிதக் கடத்தல் சம்பவங்கள் குறித்து இதுவரை 15 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தாய்லாந்தில் வேலை வாய்ப்பைப் பெற்று தருவதாக பொய்யான உத்தரவாதத்தின் பேரில் இலங்கை இளைஞர்கள் பலர் லாவோஸில் சிக்கியுள்ளமை தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை வரை 15 முறைப்பர்டுகள் கிடைத்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் அனைத்தும் தென் மாகாணத்தில் உள்ள இளைஞர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடத்தல்காரர்கள் இதற்கு முன்னர் நான்கு இளம் பெண்களையும் ஒரு இளைஞனையும் முதலில் தாய்லாந்துக்கும் பின்னர் லாவோஸ்க்கும் அழைத்துச் சென்றுள்ளனர். இதற்காக அவர்கள், சீன நிறுவனம் ஒன்றிடம் இருந்து தலா 5,000 அமெரிக்க டொலர்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சிறு போகத்திற்கு தேவையான உரம் உரிய நேரத்தில் வழங்கப்படும்

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர

**(கொழும்பு)**

**எதிர்வரும் சிறு போகத்திற்கு எந்தவித தட்டுப்பாடும் இன்றி குறித்த நேரத்தில் தேவையான உரத்தை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கான வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

விவசாய அமைச்சின் 2023 ஆம் ஆண்டுக்காக விவசாயத்துறை மேம்பாட்டுக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறு போகத்திற்கு மட்டுமன்றி கடந்த பெரும்போகத்தில் பயிரிட்ட விவசாயிகளுக்கும் இவற்றை விநியோகிக்க உள்ளதாகவும் இதனை சேகரித்து வைத்து அடுத்த போகத்திற்கேனும் பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.


இம்முறை விவசாயிகளுக்கு ஒரு சலுகையாக 10,000 ரூபாவிற்கு யூரியா உரத்தினை குறித்த நேரத்தில் வழங்க உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த முறை 19,500 ரூபாவிற்கு வழங்கப்பட்ட பண்டி உரத்தை இம்முறை 10,000 ரூபாவிற்கு வழங்க உத்தேசித்துள்ளதாகவும் அதற்காக அமை



ச்சரவை அங்கீகாரம் வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி)

# பெரிய வெங்காயம், உ.கிழங்கு விலைகள் குறைவடைந்தன



(கொழும்பு)

கொழும்பு, புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை குறைந்துள்ளது.

ஒரு கிலோ வெங்காயத்தின் மொத்த விலை தற்போது 95 ரூபாவாக உள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 130 ரூபாவாக இருந்தது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலையும் குறைந்துள்ளது.

கடந்த வாரத்தில் சுமார் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை தற்போது 130 ரூபாவாக குறைந்துள்ளது. (நி)

# லொத்தர் மோசடி தொடர்பில் அறிவிக்க தொலைபேசி எண்கள்

## இலங்கை மத்திய வங்கி


(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் லொத்தர் மோசடி தொடர்பில் இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒரு பொது அறிவிப்பில், மோசடி செய்பவர்கள் வாட்ஸ் அப், குறுந்தகவல் அல்லது உள்ளூர் அழைப்புகள் மூலம் லொட்டரி வென்றதாகத் தெரிவித்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்யச் சொல்வதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

இதுபோன்ற செய்திகளைப் பெற்றவர்கள், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவிலோ 011 247 7125 / 011 247 509 என்ற எண்களில் ஊடாக முறைப்பாடு அளிக்குமாறு இலங்கை மத்திய வங்கி கேட்டுக் கொண்டுள்ளது. (நி)

# தென்னஞ் செய்கையில் 'வெள்ளை ஈ' இனது தாக்கம்



1. தென்னையின் கீழ்ப்புறமான ஓலைகளை முதலில் தாக்க ஆரம்பிக்கும். செவ்விளநீர்,குட்டை X குட்டை வர்க்கங்களில் மிகவும் அதிகமாக தாக்கும்.
2. இலைகளின் கீழ்ப்புறமிருந்து காற்றினை உறிஞ்சும்.
3. தேன் போன்ற ஒட்டும் பதார்த்தமானது கீழ் இருக்கும் ஓலையின் மேற்பரப்பில் படியும்.
4. கறுப்பு நிறத்திலான ஒரு பூஞ்சண வளர்ச்சியினை ஏற்படுத்தும். முடிவில் கறுப்பு நிறத் தூள் காற்றினால் பரவும் சூழலுக்கும் மக்களுக்கும் ஒவ்வாத தன்மை ஏற்படுத்தும்.
5. வறட்சி காலத்தில் இதன் பரவல் வீதம் அதிகமாக இருக்கும்.
6. வாழை மரங்கள் இதன் பிரதான விருந்து வழங்கி மரங்களாக இருக்கும்.
7. 1500 இனங்கள் உள்ளன. இதில் 4 வகை தான் தற்போது தென்னைகளுக்கு பிரச்சினையாக உள்ளது.
8. வெள்ளை நிற ஈ கண்ணுக்குத் தெரியும். சிறியது, தனியாகவே, கூட்டமாக வரும். 200 மடங்கு பெருக்கத்தை காட்டும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- வேகமாக விசிறுதல் மூலம் கட்டுப்படுத்தலாம் எனவே Power spray பாவிக்க வேண்டும்.அல்லது
- வேப்பெண்ணெய் 100 மி.லீ & 10 லீ, சவர்க்காரத்தூள் 50 கிராம் அல்லது
- 3 கிராம் Actara & 10 லீ அல்லது
- 200 கிராம் Virtako & 10 லீ அல்லது
- 2.5 கிராம் Virtako & 10 லீ கலந்து நன்கு ஓலையின் கீழ்ப்பகுதி மற்றும் மேல்ப் பகுதியில் படும்படி விசுறுதல் வேண்டும்.
- மரத்தனி அடியில் இருந்து 4.5 அடி உயரத்தில் கிறிஸ் / தேங்காய் எண்ணெய்/ பூசப்பட்ட மஞ்சள் நிறத்தினாலான 3 அடி உயரம் கொண்ட பொலித்தீனை மரத்தைச் சுற்றிக் கட்ட வேண்டும்.

**தகவல்-யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம், தென்னை பயிர்ச்செய்கை சபை, பளை-கிளிநொச்சி.**

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 220 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 300 | 350 |
| தக்காளி | 80 | 80 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 80 | 80 | 100 |
| கரட் | 100 | 200 | 140-200 | 200 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 200 | 200 | 180 | 160 |
| வாழைக்காய் | 160 | 150 | 140 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 130 | 140 |
| பாகற்காய் | 550 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 150 |
| பயற்றங்காய் | 300 | 200 | 400 | 350 |
| லீக்ஸ் | 260 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 200 | 250 |
| கறிமிளகாய் | 600 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 2000 | 2000 | 1500 | 1600 |
| போஞ்சி | 160 | 200 | 240 | 350 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | 230 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 150 | 160 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 250 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 120 | 160 | 250 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 50 | 60 |
| ஈரப்பலா | 120 | 120 | 150 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் ஒருவர்...

மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணுடைய சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,30)

## தொண்டர் அணி...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாயத்த கூட்டம் நேற்றைய தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

அதன்போதே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்தோடு போதைப் பொருள் பாவனைப் பரவலைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பலப்படுத்தி பிரதேச ரீதியாக நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில் யாழ்.மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன், மேலதிக செயலர்களான ம.பிரதீபன், எஸ்.முரளிதரன் (காணி), திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படையினர் கலந்து கொண்டனர். (ம-7)

## கச்சதீவு...

வுள்ள கொடிமரத்தில் ஏற்றப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து சிலுவைப் பாதை, திருப்பலி, நற்கருணை ஆசீர், இரவு தேர்ப்பவனி ஆகியன நடைபெறவுள்ளன.

4ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் தலைமையில் திருவிழா திருப்பலி நடைபெற்ற பின்னர், கொடி இறக்கப்பட்டு திருவிழா நிறைவு பெறவுள்ளது.

இந்தத் திருவிழாவில் இந்திய - இலங்கை பக்தர்கள், அரச பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்கவுள்ளனர். (ம-7)

## யாழ்.சர்வதேச...

நாட்கள் காலை 9.00 மணி முதல் மாலை 07.00 மணிவரை யாழ்.முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

250 கண்காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக தெற்கிலிருந்து சுமார் 15ஆயிரம் பேர் வருகை தந்துள்ளனர். சுமார் 45 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் பேர் வரை பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலை சீருடையுடன் வருகை தரும் மாணவர்கள் குறித்த கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வவுனியாவில்...

றுள்ளது.

அது முற்றிய நிலையில் வீட்டில் இருந்த கோடரி மற்றும் கத்தியை கொண்டு கணவன் மனைவிமீது தாக்குதலை முன்னெடுத்துள்ளார்.

இதனைத் தடுக்க சென்ற மனைவியின் தாயார் மீதும் மருமகன் கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இதனால் தலையில் பலத்த காயமடைந்த மனைவியின் தாயார் சம்பவ இடத்திலேயே பலியானார். படுகாயமடைந்த மனைவி கவலைக்கிடமான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பெரியஉலுக்குளம் பகுதியைச் சேர்ந்த டிபி.அமராவதி (வயது-60), என்ற பெண் பலியானதுடன் அவரது மகளான துலிகா ரத்தினசிறி (வயது-37) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இரு பிள்ளைகள் உள்ளனர்.

தாக்குதலை முன்னெடுத்த நபரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.(ம-7,299)

## நீதிமன்ற...

முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியில் நீதிமன்ற கட்டளைகளை மீறி இடம்பெற்று வரும் கட்டுமான பணிகள் தொடர்பில், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஏற்கெனவே இருந்த AR/673/18 வழக்கு நேற்று நகர்த்தல் பத்திரம் இணைத்து நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிபதி ரி.சரவணராஜாவால் நீதிமன்ற கட்டளைகளுக்கு மாறாக மேற்கொள்ளப்பட்ட கட்டுமானம் தொடர் பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# நீர்வேலியில் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கு இடையூறு விளைவித்த இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்வேலி பகுதியில் துவிச்சக்கர வண்டியில் ரோந்தில் சென்ற இராணுவத்தினர் மீது மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை குறுக்கே விட்டு இடையூறு விளைவித்திருந்தனர்.

கோப்பாய்ச் சந்தியில் உள்ள இராணுவ முகாமில் கடமை புரியும் இராணுவத்தினர் மீதே குறித்த சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரினால் பூதர்மடம் மற்றும் நீர்வேலி பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ள தோடு குறித்த விடயம் தொடர்பில் இராணுவ உயரதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## இலங்...

பரிய முறையிலான மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இன்றைய சந்திப்பில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என அவர்கள் அறிவித்துள்ளனர். (ம-7)

## இந்...

சுமார் 12 இலட்சம் பெறுமதியான வலைகள் இந்திய இழுவைபடகுகளால் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் சுழிபுரம் திருவடி நிழல் கடற்பரப்பிலும் இவ்வாறானதொரு சம்பவம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

# கசிப்புடன் பெண் கைது

உரும்பிராய் பொக்கணைப் பகுதியில் நீண்ட காலமாக கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 38 வயதுடைய பெண் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு 6 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் பொக்கணைப் பகுதியில் நீண்ட காலமாக சட்டவிரோத கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குறித்த பெண் ஏற்கெனவே பல தடவைகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,104)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1502
துலாம் 7 8 1 7 7 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1077
X 28 35 36 53
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2023.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 3289
S 07 57 64 78
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1395
H 26 16 38 41 60

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 356
கன்னி 03 11 35 39 கன்னி
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/02
சீட்டிழுப்பு இலக்கம் 5047
A 6 5 2 8 4 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2022
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.03.02
தினம் வியாழக்கிழமை
C 05 12 17 28
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,634,560/-
DLB

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.02
சீட்டிழுப்பு இல : 4183
வர்ணம் : சிவப்பு
ரூ. 4,422,500/-
16 20 53 65 A
DLB

ராசி
ரூ. 2,206,300/-
திகதி 2023-03-02
வெற்றி வாரம் 3734
வர்ணம் கபிலம்
06 23 33 50
4649
654
ரூ. 12,603,760/-
DLB

I 36 22 29 32 56
சீட்டிழுப்பு வாரம் 1198
செவ்வந்தி
2023.03.02 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 310,205,200.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

சம்பர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 575
திகதி 2023-03-02
வர்ணம் நீலம்
D 10 33 36 07
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 17,587,304/-
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1848
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.03.02
ரூ. 6,029,500/-
11 18 72 74 F
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(அம்பாறை)

அம்பாறை திருக்கோவில் பொத்துவில் பிரதான வீதி தங்கவேலாயுதபுரம் சந்தியில் லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேற்று முன்தினம் மோதிய விபத்தில் மோட்டர் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் லொறி சாரதியை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாணிக்க பிள்ளையார் வீதி விநாயகபுரம் 4ஆம் பிரிவைச்சேர்ந்த 25 வயதுடைய திருச்செல்வம் கிருஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொத்துவில் பகுதியில் இருந்து திருக்கோவிலை நோக்கி பயணித்த லொறியும் திருக்கோவிலில் இருந்து தங்கவேலாயுதபுரம் நோக்கி மோட்டர் சைக்கிளில் நேற்று முன்தினம் இரவு தங்க வேலாயுதபுரம் சந்தியில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலே மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் உயிரிழந்துள்ளார். (ம-7)

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில்

# மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை ஆரம்பிக்க திட்டம்

(கொழும்பு)

உள்ளூராட்சிசபைத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன் ஆரம்பகட்ட விசாரணைகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்வதன் காரணமாக விசாரணைகளுக்காக வேறொரு திகதியை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# பாரஊர்தி சாரதியை கத்தியால் குத்தியவர் கைது

## கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

பட்டப்பகலில் பாரஊர்தி சாரதியை கத்தியால் குத்திய சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை 6.00 மணியளவில் கிளிநொச்சி நகரில் ஏ9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

தேங்காய் வியாபாரம் செய்து வந்த இருவருக்கும் இடையில் பண கொடுக்கல் வாங்கல் காணப்பட்டது. குறித்த பார ஊர்தியின் சாரதிக்கும் கைதான நபருக்கும் இடையில் நேற்று பகல் முரண்பாடு ஏற்பட்டது.

சாரதி பணத்தை திருப்பிக் கொடுக்காது பார ஊர்தியை செலுத்தியுள்ளார். இடைமறித்து பணத்தைக் கேட்டபொழுது இருவருக்குமிடையில் கருத்து முரண்பாடு முற்றியுள்ளது.

இந்த நிலையில், கத்தி ஒன்றினால் சாரதி தாக்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் காயமடைந்த சாரதி கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதல் மேற்கொண்டவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,100)

# தமது இருப்பை தக்கவைக்கவே அரசு தேர்தலை பிற்போடுகின்றது

## ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

தமது அரசியல் இருப்பை தக்கவைக்கவே ராஜபக்ஷ, ரணில் தரப்பு தேர்தலை பிற்போட முயற்சிக்கின்றது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக்கோரி முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள் தொடரும்எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலை ஒத்திவைத்தால், நாம் வீட்டுக்குள் முடங்கிவிடுவோம் என ரணில் நினைக்கின்றார் போலும்.

அதற்கு இடமில்லை. தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும். அதனை நிச்சயம் நாம் பெறுவோம்.

தமது அரசியல் இருப்பை தக்கவைக்கவே ராஜபக்ஷ, ரணில் தரப்பு தேர்தலை பிற்போட முயற்சிக்கின்றது என்றார். (ம-7)

# ஸ்கந்தா - மகாஜனா மோதும் வீரர்களின் போர் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மற்றும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிகளுக்கிடையிலான 21 ஆவது கிரிக்கட் போட்டி இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காலை 8.30 மணியளவில் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் ஆரம்பமாகவுள்ள கிரிக்கெட் போட்டி இன்று, நாளை என இரு தினங்களாக இடம்பெறவுள்ளது.

இவ் 21ஆவது வீரர்கள் போர் துடுப்பாட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை சிறை கண் காணிப்பாளர் கண்டராஜ் அவர்களும் சிறப்பு விருந்திர்களாக வட மாகாண கிரிக்கட் சங்க பொது முகமையாளர் சிறிதரன் அவர்களும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் கலாநிதி ஜொனிடன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்

முடிவடைந்த 20 ஆட்டங்களில் 11 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்துள்ள நிலையில் மகாஜனாக் கல்லூரி அணி 5தடவைகளும் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி 4 தடவைகளும் வெற்றிவாகை சூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம.-7)


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**04.03.2023**

**வங்கியியல் கற்கைநெறிகள்**
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L
6 Passes with 5
Credits including Maths.

**கணக்காளர் கற்கைநெறிகள்**
**Chartered Accounting Courses**
Business level - 1, II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes.

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
**AA1, AA2, AA3)**
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English

**G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்**

**Certificate Course in English**
21 Batches have successfully Completed the Course

Further Details: **Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149
077 440 5917 (C-6078)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்பு காணி விற்பனைக்கு**
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14782)

**076 465 0171, 076 911 9371**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 19 பரப்பு காணி விற்பனைக்கு**
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 km தூரம்.
- புத்தூர் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி
- அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14782)

**076 435 0614, 077 638 5683**

**வாகனம் குத்தகைக்கு தேவை**

வான்கள், கார்கள் குத்தகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு :
**077 489 1279**
(14775)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் (சாவகச்சேரி) தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் (சமையல் வேலை உட்பட) தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புக்கு :-
**077 045 6493**
(14778)

**உடனடி வேலை வாய்ப்பு**

**நிர்வாக உத்தியோகத்தர்**





விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-6094)

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

**EXECUTIVE OFFICER**





- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6094) **V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777

**Pearl Island Inn**
**Hotel & Restaurant**
Dine - in | Take Away
Cool Bar

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன் உயர்தரம் வாய்ந்த தங்கும் இடவசதிகளுடன் (Rooms) மற்றும் உலக தரம்வாய்ந்த யாழ், இந்திய, சைனீஸ், மொங்கோலியன் உணவு வகைகள் மற்றும் குளிர்பானங்களை இங்கிருந்தும் உங்கள் வீடுகளிற்கு எடுத்து சென்றும் சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைந்திடுவீர்.

தொடர்புகளுக்கு :
077 002 2088
021 222 2678
www.pearlislandinn.com
No.603, Hospital Road, Jaffna.

உங்கள்
S.Ubesegaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn குழுமம்







(C-6093)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.